05.08.2025

O.S.No. 118/2021

DW1– இன்பராஜ்– த/பெ. முத்துசாமி பாண்டி நாடார்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 05.08.2025

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u> ( வாதி தரப்பில்)

28. எனது முதல்விசாரணை வாக்குமூலம், எதிருரை எனது கையொப்பம் உள்ளதா என்றால் சரிதான். சர்வே எண்.204 மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 90 செண்ட், அதில் 3 ல் 1 பங்கு என்றால் சரிதான். 1 பங்கு என்பது 63.33 செண்ட் என்றால் சரிதான்.

29. வாதியின் பத்திரத்தில் 3 ல் 1 பங்குதான் 63.33 செண்ட் துலங்குகிறது என்றால் சரிதான். சர்வே எண்.204 ல் கிரையம் வாங்கியதற்குபின்பு தான் கிணறு வெட்டப்பட்டது என்றால் சரிதான். கிணறானது வாதியின் இடத்தில்தான் வெட்டப்பட்டது. மேலும் கிணற்றில் 2 பங்கு எனக்கும், 1 பங்கு வாதிக்கும் பாத்தியப்பட்டது. 2 பங்கு என்பது எப்படி என்றால் எனக்கு 1 பங்கும், மற்றொரு இடத்திற்கு 1 பங்கும் பாத்தியப்பட்டது. வாதியின் இடத்தில் கிணறு வெட்டப்பட்டது என்றால் சரிதான். அதற்குபதிலாக 1/4 செண்டநிலம் கொடுத்தேனா என்றால் இல்லை.

30. சர்வே எண்.218 மொத்தம் 3 ஏக்கர் 30 செண்ட். அதில் எனக்கு 1 ஏக்கர் 10 செண்ட் பாத்தியம். 1 ஏக்கர் 10 செண்ட் சேர்ந்தணையாக தான் உள்ளது. அதற்கான நான்குமால் வடக்கே கையிருப்பு, மேற்கே வண்டிப்பாதை, கிழக்கே, தெற்கே வாதியின் இடம். வண்டிப்பாதைக்கு

கிழக்கே வாதியின் இடத்தில் கிணறு உள்ளதா என்றால் இல்லை. அது என் இடத்தில்தான் உள்ளது. அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மொத்தம் இந்த வழக்கில் 4 கிணறுகள் உள்ளன. அந்த 4 கிணறுகளும் எனக்கு பாத்தியப்பட்டது என்பதை காண்பிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

31. சர்வே எண்.204/1பி எனது மனைவியின் பெயரில் உள்ளது. சர்வே எண்.204/2ல் உள்ள கிணறானது சர்வே எண்.204/2ல் உள்ள இடத்திற்கு மட்டும் தான் பாசன வசதி என்றால் சரியல்ல, சர்வே எண்.204/1க்கும் நீர் பாய்கிறது.

32. எனக்கும், வாதிக்கும் எந்த பிரச்சனையும் இல்லை. எனக்கும் வாதிக்கும் சொத்து சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் 2ம் வாதியின் உயர் அதிகாரியிடம் எந்த புகாரும் கொடுக்கவில்லை. புகாரின் அடிப்படையில் எந்த விசாரணையும் நடைபெறவில்லை.

33. எனக்கு படிக்கத்தெரியாது. சர்வே எண்.218 உட்பிரிவான விவரம் எனக்கு தெரியாது. மேற்படி சர்வே உட்பிரிவாகி 30 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது என்றால் சரியல்ல. சர்வே எண்.219ன் மொத்த விஸ்தீரணம் 12 ஏக்கர் 10 செண்ட், அதில் எனக்கு 6 ஏக்கர் 5 செண்ட் பாத்தியம். அதன் எல்கைமால் மேற்கே வண்டிப்பாதை, வடக்கே கையிருப்பு, தெற்கே, கிழக்கே வாதி இடம்.

34. சர்வே எண்.219 ல் தெற்கில் உள்ள கிணறு உள்ளது என்றால் சரிதான். அந்த கிணறானது எனது இடத்திலும், வாதியின் இடத்திலும் உள்ளது. மின்இணைப்பு வாதியின் பெயரில் உள்ளது. கிணற்றின் தெற்கே ஆழ்துளை கிணறு உள்ளது என்றால் சரிதான். அது வாதியின் இடத்தில் இல்லை, எனது இடத்தில் உள்ளது. அதை நிரூபிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. தாக்கல் செய்யாததால் அதை என்னால் நிரூபிக்க இயலாது என்றால் சரியல்ல.

35. சர்வே எண்.218 ல் உள்ள கிணற்றின் புல எண். 218/5. மேற்படி கிணற்றில் இருந்து எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.204 ல் தண்ணீர் பாசனம் செய்துவருகிறேன். 218 ல் உள்ள கிணற்றில் எந்த பாசனமும் செய்யவில்லை என்றால் சரியல்ல.

36. 1989 ல் நான் எந்த இடமும் வாங்கவில்லை. சர்வே எண்.204,218,219 மொத்த இடமும் சேர்ந்தணையாக இல்லை என்றால் சரியல்ல. எனக்கும், வாதிக்கும் இடப்பிரச்சனை சம்பந்தமாக தாவா தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மொத்தம் உள்ள 4 கிணறும் வாதியின் பெயரில் தான் உள்ளது. அதை நிரூபிக்க என்னிடம் எந்த ஆதாரமும் இல்லை என்றால் சரியல்ல. எனவே வாதியின் வழக்கானது அனுமதிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.